**தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள்**

**முன்னிலை - திருதீபக் ஜேக்கப்,இ.ஆ.ப,**

ந.க.எண்.418/2023/ச.உ.தி-3 நாள். .08.2023

பொருள் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் - தஞ்சாவூர் மாவட்டம் - சட்டமன்ற 110 விதியின் கீழ் கிராமப்புறங்களில் உள்ள தொடக்கப் பள்ளிகளில் 1 முதல் 5ம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவிகளுக்கு முதலமைச்சரின் காலை உணவு திட்டம் விரிவுபடுத்திட அரசாணை வரப்பெற்றது - பேரூராட்சி மற்றும் ஊரக பகுதிகளில் உள்ள தொடக்கப்பள்ளிகளில் காலை உணவு திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது - மாவட்ட மற்றும் பள்ளி அளவிலான குழுக்கள் அமைத்து உத்தரவிடல.

பார்வை 1 அரசு ஆணை எண்.43 சமூகநலம் மற்றும் மகளிர் உரிமைத் துறை நாள்.27.07.2022.

2 அரசு ஆணை எண்.33 சமூகநலம் மற்றும் மகளிர் உரிமைத் துறை நாள்.07.06.2023.

3 அரசு ஆணை நிலை எண்.56 சமூகநலம் மற்றும் மகளிர் உரிமைத் துறை நாள்.14.08.2023

ஆணை:

தமிழ்நாட்டில் உள்ள அரசு பள்ளிகளில் பயிலும் ஏழை மாணவர்களின் படிப்பினை ஊக்குவிக்கவும், ஊட்டச்சத்து குறைபாட்டினை போக்கவும், கற்றல் இடைநிற்றலைத் தவிர்க்கவும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண் 110ன் கீழ் கிராமங்களில் உள்ள அரசு தொடக்கப் பள்ளிகளில் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியருக்கு அனைத்துப் பள்ளி வேலை நாட்களிலும் காலை வேலைகளில் சத்தான சிற்றுண்டி வழங்கப்படும் என்று அறிவிப்பு வெளியிடப்பட்டதை தொடர்ந்து தஞ்சாவூர் மாநகராட்சியில் 16 பள்ளிகளிலும் கும்பகோணம் மாநகராட்சியல் 21 பள்ளிகளிலும் 16.09.2022 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இதனை தொடர்ந்து பார்வை 1 மற்றும் 2ல் காணும் அரசாணைகளின்படி இத்திட்டத்தினை ஊரக பகுதிகளில் உள்ள பள்ளிகளிலும் எஞ்சிய நகராட்சி பள்ளிகளிலும் விரிவுபடுத்தி செயல்படுத்திட உத்தரவிடப்பட்டுள்ளது. அதனடிப்படையில் தஞ்சாவூர் மாவட்டத்தில் 14 ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் பேரூராட்சி பகுதிகளிலுள்ள 1087 அரசு பள்ளிகளிலும், பட்டுக்கோட்டை நகராட்சியில் 16 பள்ளிகளிலும், அதிராம்பட்டினம் நகராட்சியில் 8 பள்ளிகளிலும், மேலும் கும்பாகோணம் மாநகராட்சியில் ஏற்கனவே செயல்படுத்தப்பட்டுவரும் 21 பள்ளிகளுடன் சுவாமிமலை பேரூராட்சியில் உள்ள ஒரு ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியுடன் சேர்த்து 22 பள்ளிகளில் இத்திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.

பார்வை 3ல் காணும் அரசாணையில் இத்திட்ட பணியை கண்காணிக்க மாவட்ட அளவிலான கண்காணிப்புகுழு மற்றும் பள்ளி அளவிலான கண்காணிப்புகுழு அமைத்து கூட்ட நடைமுறைகளை ஏற்படுத்தி ஆணையிடப்பட்டுள்ளது. அதனடிப்படையில் கீழ்காணும் விபரப்படி மாவட்ட அளவிலான கண்காணிப்புகுழு மற்றும் பள்ளி அளவிலான கண்காணிப்புகுழு அமைத்து உத்தரவிடப்படுகிறது.

3. மாவட்ட அளவிலான கண்காணிப்புகுழு

| வ.எ. | அலுவலர்கள் விபரம் | பதவியின் பெயர் |
|---|---|---|
| 1 | மாவட்ட ஆட்சித் தலைவர் | தலைவர் |
| 2 | திட்ட இயக்குநர் - கூடுதல் ஆட்சியர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, தஞ்சாவூர். | உறுப்பினர் |
| 3 | திட்ட இயக்குநர், மகளிர் மேம்பாட்டு முகமை, தஞ்சாவூர். | உறுப்பினர் |
| 4 | மாநகராட்சி ஆணையர்கள், தஞ்சாவூர் மற்றும் கும்பகோணம். | உறுப்பினர் |
| 5 | முதுநிலை மண்டல மேலாளர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், தஞ்சாவூர். | உறுப்பினர் |
| 6 | கூட்டுறவு சங்கங்களில் இணை பதிவாளர், தஞ்சாவூர். | உறுப்பினர் |
| 7 | நகராட்சிகளின் மண்டல நிர்வாக இயக்குநர், தஞ்சாவூர். | உறுப்பினர் |
| 8 | மாவட்ட சமூகநல அலுவலர், தஞ்சாவூர். | உறுப்பினர் |
| 9 | மாவட்ட திட்ட அலுவலர், ஒ.கு.வ.தி. அலுவலர், தஞ்சாவூர். | உறுப்பினர் |
| 10 | மாவட்ட உணவு பாதுகாப்பு அலுவலர், தஞ்சாவூர். | உறுப்பினர் |
| 11 | மாவட்ட வழங்கல் அலுவலர், தஞ்சாவூர் | உறுப்பினர் |
| 12 | உதவிஇயக்குநர், (ஊராட்சிகள்), தஞ்சாவூர். | உறுப்பினர் |
| 13 | உதவிஇயக்குநர், (பேரூராட்சிகள்), தஞ்சாவூர். | உறுப்பினர் |
| 14 | முதன்மை கல்வி அலுவலர், தஞ்சாவூர் | உறுப்பினர் |
| 15 | மாவட்ட கல்வி அலுவலர்கள், (தொடக்க கல்வி) பட்டுக்கோட்டை மற்றும் தஞ்சாவூர். | உறுப்பினர் |
| 16 | மாவட்ட அலுவலர், மின்ஆளுகை, தஞ்சாவூர். | உறுப்பினர் |
| 17 | நகராட்சி ஆணையர்கள், பட்டுக்கோட்டை மற்றும் அதிராம்பட்டினம். | உறுப்பினர் |
| 18 | மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (சத்துணவு), தஞ்சாவூர். | உறுப்பினர் செயலர். |

மாவட்ட அளவிலான கண்காணிப்பு குழுவின் கூட்ட நடைமுறை.

- கண்காணிப்புக் குழுக்கூட்டம் மாதத்திற்கு ஒரு முறை கூட்டப்படவேண்டும்.
- திட்டத்தின் சேவை வழங்குவதில் மாவட்ட அளவிலான சம்பந்தப்பட்ட துறைகளை ஒருங்கிணைத்தல், கண்காணித்தல், மதிப்பாய்வு செய்தல் மற்றும் திட்டத்தினை திறம்பட செயல்படுத்துவதற்கு தேவையான மாற்றங்களை பரிந்துறைத்தல்.
- மாவட்ட அளவில் நிர்ணயிக்கப்பட்ட இலக்கை அடைவதற்கு தேவைகளை பரிசீலித்தல்
- திட்டத்தினை செயல்படுத்துவது தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் மதிப்பாய்வு செய்து கண்காணித்தல்.
- திட்டத்தை செயல்படுத்தும் போது மாவட்ட அளவில் ஏற்படும் இடையூறுகளை களைய நடவடிக்கை மேற்கொள்ளுதல்.
- மாநில அளவிலான கண்காணிப்புக் குழுவிற்கு அறிக்கை அளித்தல்.

2. பள்ளி அளவிலான கண்காணிப்புக் குழு.

| வ.எண் | அலுவலர் விபரம் | பதவியின் பெயர் |
|---|---|---|
| 1 | சம்பந்தப்பட்ட பள்ளி தலைமை ஆசிரியர் அல்லது நியமனம் செய்யப்பட்ட ஆசிரியர். | தலைவர் |
| 2 | பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் - பிரதிநிதிகள் (இருவர்) | உறுப்பினர் |
| 3 | சம்பந்தப்பட்ட பள்ளியின் காலை உணவுத் திட்ட பொறுப்பாளர், சுய உதவிக் குழு சார்ந்தவர். | உறுப்பினர் |

கூட்ட நடைமுறைகள்

- நாள்தோறும் காலை உணவு குழந்தைகளுக்கு உரிய நேரத்தில் வழங்குவதை கண்காணித்து உறுதி செய்தல் வேண்டும்.
- சமைப்பதற்கு முன்பு சமையல் பாத்திரங்கள் சுத்தமாக இருப்பதையும் மற்றும் மாணவ - மாணவியர் உணவு உண்ண பயன்படுத்தப்படும் தட்டு மற்றும் டம்ளர் தூய்மையான முறையில் வழங்கப்படுவதை உறுதி செய்தல் வேண்டும்.
- உணவை மாணவ - மாணவியர்களுக்கு வழங்குவதற்கு முன்பு சுவைத்துப் பார்த்து அதன் பின்பு வழங்க வேண்டும்.
- உணவு பொருட்கள் பாதுகாப்பான முறையில் பராமரிக்கப்படுவதை உறுதி செய்தல் வேண்டும்.
- நாள்தோறும் சரியான நேரத்தில் தகவல்கள் செயலியில் பதிவேற்றம் செய்வதை உறுதி செய்தல் வேண்டும்.
- வாரம் ஒருமுறை குழுக்கூட்டம் நடத்தி திட்டம் செம்மையாக நடைபெறுதல் தொடர்பாக கலந்து ஆலோசித்து தங்கள் பரிந்துரை - கருத்துக்களை சம்பந்தப்பட்ட வட்டார - நகராட்சி - மாநகராட்சி அலுவலர்களுக்கு தெரிவித்திட வேண்டும்.

மேற்கண்டவாறு மாவட்ட அளவில் மற்றும் பள்ளி அளவில் அமைக்கப்பட்டுள்ள கண்காணிப்புக்குழுவானது மாதம் ஒருமுறை கூட்டப்பட்டு இத்திட்டம் செயல்பாடுகள் மற்றும் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்து மாநில அளவிலான வழிகாட்டி குழுவிற்கு அறிக்கை அனுப்பி வைக்க வேண்டும்.

மாவட்ட ஆட்சித் தலைவர்,
தஞ்சாவூர்.

பெறுநர். 1- தொடர்புடைய அலுவலர்கள்

நகல். 1. மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு முகமை, சென்னை.
2. ஆணையர், சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை, சென்னை.
3. அரசு முதன்மைச் செயலர், சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை, சென்னை.